புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • மே 01, 2025 • புரட்சி 25 • முழக்கம் 16 • விலை ரூ.3.00


## சேலத்தில் ரயில் மறியல்! கோவையில் கருப்புக்கொடி! சென்னை மதுரையில் கழகம் ஆர்ப்பாட்டங்கள்...

# ஆளுநருக்கு எதிர்ப்பு வலுக்கிறது!

சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஆளுநர் ரவியே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு எனும் முழக்கத்தோடு..

25.04.2025 வெள்ளி மாலை 4.00 மணியளவில் சேலம் ரயில் நிலையத்தில், உச்சநீதிமன்றத் தீர்ப்பை அவமதித்த ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

இந்த ரயில் மறியல் போராட்டத்திற்கு கழக மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமை வகித்தார். கழக மாநில வெளியீட்டுச் செயலாளர் கோபி.இராம.இளங்கோவன் முன்னிலை வகித்தார்.

தமிழ்ப் புலிகள் கட்சி மாவட்டச் செயலாளர் ராவண பிரபு, CPML மக்கள் விடுதலை ப.செல்வகுமார், உழைப்போர் இயக்கம் கண்ணன், புரட்சிகர இளைஞர் முன்னணி வின்சென்ட் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கலந்து கொண்டவர்கள்: அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, சேலம் மாநகரத் தலைவர் பாலு, சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திவ்யா, சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, மாவட்ட இளைஞர் அணித் தலைவர் தேவா, மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சுசி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவா, நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன், மேட்டூர் நகரத் தலைவர் மார்ட்டின், இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ், கோபியிலிருந்து ஈரோடு மாவட்டச் செயலாளர் செல்வகுமார், பொருளாளர் ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய கழகப் பொறுப்பாளர் அருளானந்தம், காந்தி நகர் கிளைத் தலைவர் சின்னத்தம்பி தோழர்கள் ராமச்சந்திரன் நடராஜன் ஆகியோர் மற்றும் சேலம் மாநகரம், ஈரோடு, நாமக்கல், இளம்பிள்ளை, மேட்டூர், நங்கவள்ளி, வனவாசி, காவலாண்டியூர், மேட்டூர் RS, மேச்சேரி, ஏற்காடு, தாரமங்கலம் ஆகிய பகுதிகளில் இருந்து தோழர்கள் 80 க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.






**மதுரை:** உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் அரசியலமைப்பையும் அவமதிக்கும் ஆர்எஸ்எஸ் ஆளுநர் ஆர் என் ரவியைக் கண்டித்தும் பதவி விலகக் கோரியும் ஆர்ப்பாட்டம் 26.04.25 அன்று மாலை 4 மணியளவில் மதுரை கோரிப்பாளையம் பள்ளிவாசல் தெருவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அண்ணாத்துரை (மக்கள் சட்ட உரிமைகள் இயக்கம்), மெய்யப்பன் (தமிழ்த்தேசக் குடியரசு இயக்கம்), த.அபுதாஹீர்(எஸ்டிபிஐ), நடராசன் (மக்கள் அதிகாரம்), இசுமாயில் (தமிழக மக்கள் ஜனநாயக கட்சி), அம்ஜத்கான் (இந்திய தேசிய லீக்), இன்குலாப் (மாமன்ற உறுப்பினர் விசிக), சிதம்பரம் (தமிழ்ப்புலிகள் கட்சி), இராஜா (குடியுரிமைப் பாதுகாப்பு நடுவம்), பித்தன் (தந்தை பெரியார் திராவிடர் கழகம்), பரிதி (தமிழ் தமிழர் இயக்கம்), மேரி (தமிழ்த்தேச மக்கள் முன்னணி), அனீஸ்(ஐக்கிய முஸ்லீம் முன்னேற்றக் கழகம்), கார்த்திக் (ஆதித்தமிழர் பேரவை), காளிதாசு (தமிழ் மாநிலக்குழு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), நிலவழகன் (மக்கள் தமிழகம் கட்சி), விடுதலை வீரன் (திராவிடத் தமிழர் கட்சி), கனியமுதன் (மாநிலத் துணைச் செயலாளர் விசிக), மணிபாபா (தமிழக வாழ்வுரிமைப் பாதுகாப்பு மக்கள் கட்சி), இராமலிங்கம் (மக்கள் அதிகாரக் கழகம்), அப்பாஸ் (தமுமுக & மனிதநேய மக்கள் கட்சி) ஆகிய தோழர்கள் கலந்துகொண்டு தங்கள் கண்டங்களைப் பதிவு செய்தனர். திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் வேங்கைமாறன், சத்தியமூர்த்தி மற்றும் ஆனந்த் ஆகியோர் பங்கேற்றனர்.

**சென்னை:** உச்சநீதிமன்ற தீர்ப்பை அவமதித்த ஆளுநர் ஆர். என்.ரவியைக் கண்டித்து, கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் பனகல் மாளிகை அருகில் மாலை 4 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது..

ஆர்ப்பாட்டத்தில் MRF தொழிற்சங்கம் சேகர், மக்கள் அதிகாரக் கழகம் - வெற்றிச்செல்வன் பொதுச்செயலாளர், மைனர் வீரமணி - யூடு புரூடஸ் ஆகியோர் கண்டன உரையாற்றினர்..

ஆர்ப்பாட்டத்தில், கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி, வடசென்னை மாவட்ட செயலாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், திமுக தலைமைக் குழு உறுப்பினர் அன்பரசு, வழக்கறிஞர் இளமாறன் ஆகியோர் உட்பட சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.





கோவையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்!

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஊட்டியில் துணைவேந்தர்கள் மாநாட்டை நடத்த கோவை விமான நிலையம் வந்த ரவியை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொருளாளர் துரைசாமி அவர்கள் தலைமையில் இந்த கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்ப் புலிகள் கட்சி சார்பில் மாநில பொதுச் செயலாளர் இளவேனில், மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் இராமச்சந்திரன், கோவை சிற்றரசு, கோவை குமார், நந்தன் தம்பி, சந்திரன், அன்னூர் முருகேசன், சுரேஷ், மூர்த்தி, நவீன், கொங்கு விடுதலைப் புலிகள் கட்சி விஸ்வநாதன், சண்முகம், கிருஷ்ணமூர்த்தி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், திவிக மாநகரத் தலைவர் நிர்மல் குமார், மாநகர செயலாளர் வெங்கட், சூலூர் தமிழ்ச்செல்வி, பல்லடம் சண்முகம், முத்து, ரவி சங்கீதா, சரஸ்வதி, மாரிமுத்து, யாழினி, கிருஷ்ணன், மாதவன், ஸ்டாலின் ராஜா, ஆட்டோ சந்திரன் தோழர்கள் கலந்து கொண்டு கைதாகினர்.



## பெரியார் இயக்கத் தொண்டர்களைப் போல் உலக வரலாற்றில் எவரும் இல்லை

**-உதயநிதி ஸ்டாலின்**



**கோவையில் ஏப்ரல் 29-ல் திராவிட இயக்கத் தமிழர் பேரவை நடத்திய சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி பேசியதாவது:** தந்தை பெரியாரைப் போல தன் கொள்கைக்காக உழைத்த தலைவர் உலக வரலாற்றிலேயே எங்கு தேடினாலும் கிடைக்க மாட்டார். பெரியார் இறந்து 51 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், தமிழ்நாட்டின் அரசியலை இன்றும் அவர்தான் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார் என்றால், அதுதான் பெரியாரின் சிறப்பு.

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு உங்களின் அழைப்பை ஏற்று வந்து இருக்கிறேன். தி.மு.க-வின் இளைஞர் அணிச் செயலாளராக வந்திருக்கிறேன், அது பெருமைதான். நீங்கள் எல்லோரும் சொன்னதைப்போல் விளையாட்டுத்துறை அமைச்சராக வந்திருக்கிறேன், அதுவும் பெருமைதான். தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக வந்திருக்கிறேன், அதுவும் பெருமைதான். ஆனால், அவை எல்லாவற்றையும்விட மிகப் பெருமையாக நான் கருதுவது என்னவென்றால் உண்மையான பெரியாரின் கொள்கைப் பேரனாக இந்த மாநாட்டிற்கு வந்திருக்கிறேன். அதனால்தான் பெரியாரின் தொண்டர்கள் மத்தியில் பேசும்பொழுது எனக்கு தனி விதமான ஒரு உத்வேகம் ஏற்படுகிறது. தனித் தெம்பு வருகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், உலக வரலாற்றிலேயே தந்தை பெரியாருக்கு கிடைத்த தொண்டர்களைப் போல வேறு எந்த இயக்கத்திற்கும், எந்தத் தலைவருக்கும் கிடைத்தது கிடையாது.

### பெருமை வாய்ந்த தொண்டர்கள்!

அரசியல் கட்சியாக இருந்தால், அது என்றைக்காவது ஒருநாள் தேர்தலில் நிற்கும். போட்டி போடலாம், ஏதாவது ஒரு பொறுப்பு கிடைக்கும். ஆனால், பெரியாரின் தொண்டர்கள், அவர்களின் கொள்கையை கொண்டு செல்வதற்காக, அடிபட்டார்கள், மிதிபட்டார்கள், வெட்டப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஏன் இன்னும் சொல்லப்போனால் கொலைகூட செய்யப்பட்டார்கள், அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தொண்டர்கள்தான் பெரியாரின் கொள்கைத் தொண்டர்கள்.

# ஆளுநர் மீது உச்சநீதிமன்றம் ஒட்டிய ஸ்டிக்கர்

**-விடுதலை இராசேந்திரன்**

ஆளுநர் ஆர்.என் ரவி பதவி விலக வேண்டும் என்ற முழக்கத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது என் கருத்து. நீதிமன்ற அவமதிப்புச் சின்னமாக இங்கேயே இருக்கட்டும்.

உச்ச நீதிமன்றம் ஆளுநரின் மீது இரண்டு ஸ்டிக்கர்களை ஒட்டி உள்ளது. சட்ட விரோதமாக முறைகேடாக செயல்பட்டுள்ளார் என்பது ஒன்று anti constitunal and erroneous, நல்ல எண்ணம் கொண்டவராக நடந்து கொள்ளவில்லை என்பது இரண்டு.

*The conduct exhibited on part of the Governor, as it clearly appears from the events that have transpired even during the course of the present litigation, has been lacking in bonafides. There have been clear instances where the Governor has failed in showing due deference and respect to the judgments and directions of this Court. In such a situation, it is difficult for us to repose our trust and remand the matter to the Governor with a direction to dispose of the bills in accordance with the observations made by us in this judgment. Article 142 empowers this Court to do complete justice and in the facts of the present case, more particularly, in light of the fact that the option of granting assent to the repassed bills was the only constitutionally permissible option available with the Governor, we deem it absolutely necessary and appropriate to grant that very relief by exercising our extraordinary powers. No meaningful purpose would be served by keeping the bills, some of which have already been pending for incredulously long periods, pending for more time. Therefore, we deem the assent to have been granted.*

**இதன் தமிழாக்கம்:** உண்மையும், நேர்மையும் மிக்க நல்லெண்ணமே அவருக்கு இல்லாததைத்தான் ஆளுநரின் அலட்சியப் போக்கு தெளிவுபடுத்துகிறது. தற்போதைய வழக்கு சார்ந்த நிகழ்வுகள் மூலம் அவருடைய உள்நோக்கம் தெளிவாகிறது. இந்த நீதிமன்றத்தின் உத்தரவுகளையும், தீர்ப்புகளையும் ஆளுநர் மதிக்கத் தவறிவிட்டது பல சந்தர்ப்பங்களில் தெளிவாகத் தெரிந்து விட்டது. நடவடிக்கைகளின் காலதாமதம் அவர் இந்த நீதிமன்றத்தை அவமதிப்பதாகவே கருத வைக்கிறது. இந்த நிலையில் இந்தத் தீர்ப்புக்கேற்ப ஆளுநரை மசோதாக்களை ஏற்கச் செய்வது எங்களுக்குச் சிரமமாக உள்ளது. அவர் சுமுகமாக முடிவெடுத்து பிரச்சினையைத் தீர்ப்பார் என்று நம்ப முடியவில்லை. முழுமையான நீதி வழங்க இந்த நீதிமன்றத்திற்கு அரசமைப்புச் சட்டப்பிரிவு 142 அதிகாரம் வழங்கியுள்ளது. தற்போது எதிர் கொள்ளப்பட்டுள்ள வழக்கு சார்ந்த அம்சங்களையெல்லாம் பார்க்கும்போது, எங்கள் சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவது தான் சரி என்று தோன்றுகிறது. மறுமுறையும் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதைத் தவிர ஆளுநருக்கு வேறு வழி நிச்சயமாக இல்லை என்பதை அரசமைப்புச் சட்டம் உறுதிப்படுத்துகிறது. எனவே, அவரை இணங்கச் செய்ய எங்கள் சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியதே அவசியம்.

முடக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில் சில மசோதாக்கள் மிக நீண்ட காலமாக உள்ளன. இந்த நிலை மேலும் நீடிப்பது அர்த்தமற்றதாகும். எந்த ஒரு நல்ல நோக்கமும் இதனால் (காலதாமதத்தால்) நிறைவேறப் போவதில்லை. காலதாமதம் இனிமேலும் தொடரக்கூடாது. எனவே மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதாகவே நாங்கள் கருதுகிறோம்."

இந்த ஸ்டிக்கர்களுடன் தமிழ்நாட்டில் இருந்தால் தான் அவரது அத்துமீறல்கள் தமிழ்நாட்டு மக்களிடம் நினைவுப்படுத்தி கொண்டே இருக்கும். இவருக்கு பதிலாக வேறு ஒருவர் வந்தால் கூட அவர் மற்றொரு சங்கியாகவே இருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு வரலாற்று சம்பவத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுடுகாட்டில் சூத்திர சுடுகாடு என்று தனியாக ஒதுக்கி வைத்திருந்தார்கள். தஞ்சையில் சூத்திர சுடுகாட்டில் தான் சுயமரியாதை சுடரொளி அஞ்சா நெஞ்சன் அழகிரி அடக்கம் செய்யப்பட்டார், பெரியார் அதை கண்டித்து எழுதியிருக்கிறார். அப்போது மதுரையிலும் இதே போல் சூத்திர சுடுகாடு இருந்தது. மேயராக இருந்த திமுகவைச் சார்ந்த சுயமரியாதைக்காரர் மதுரை முத்து இந்தப் பெயரை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்த போது அதை நீக்க வேண்டாம் அப்படியே இருக்கட்டும் எதிர்கால தலைமுறைக்கு இப்படி ஒரு இழிவு இருந்தது என்பது அப்போது தான் தெரியும் என்று கருத்தை கூறினார். அதே பார்வையில் தான் இப்போது ஆளுநரையும் பார்க்க தோன்றுகிறது.

***சென்னை கண்டன ஆர்ப்பாட்டத்தில் 24.04.2025 கழக பொதுச்செயலாளர் பேசியது.***

# பெரியார் பல்கலைத் துணைவேந்தர் பட்டியல் இனப் பேராசிரியர்களைப் பழிவாங்குகிறார்



சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு.ஜெகநாதன் மீது கருப்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்த தொழிலாளர் சங்க சட்ட ஆலோசகரை சாதியினைச் சொல்லித் திட்டியதாக "அவர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது". அந்த வழக்கினைத் தள்ளுபடி செய்யக்கோரி துணைவேந்தர் தொடுத்த வழக்கானது சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

இதனால் ஆத்திரமடைந்த துணைவேந்தர், பட்டியலினக் கல்வியியல் பேராசிரியருக்கு அனைத்து தகுதிகள் இருந்தும் அவருக்கு துறைத் தலைவர் பதவி வழங்க மறுத்துள்ளது கடும் கண்டனத்திற்குரியதாகும்.

சேலம் பெரியார் பல்கலையில் இரண்டு பேராசிரியர்கள் இருக்கும் பொழுது கல்வியியல் துறைக்கு சம்பந்தமில்லாத நூலக அறிவியல் துறைப் பேராசிரியர் முருகன் என்பவர் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.நூலக அறிவியல் துறைத் தலைவர் முருகன் பணி நியமனமே சர்ச்சைக்குரியது.இது தொடர்பாக உயர்கல்வித்துறை கூடுதல் செயலாளர் திரு.பழனிச்சாமி விசாரணைக் குழுவால் விசாரிக்கப்பட்டு அந்த அறிக்கையின் நடவடிக்கை நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவருக்குப் பிறகு தமிழ்த் துறைத் தலைவர் பெரியசாமி என்பவர் கல்வியியல் துறைத் தலைவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இவருக்கும் கல்வியியல் துறைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இவர் மருதமலை முருகன் கோவிலில் ஓதுவாராக இருந்ததை கற்பித்தல் அனுபவமாகக் காட்டி பணியில் சேர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்குப் பிறகு எடப்பாடி பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் பணியாற்றி தற்பொழுது அந்த கல்லூரி அரசு கல்லூரி ஆக மாற்றப்பட்டதால் அந்த கல்லூரி முதல்வராக இருந்த வெங்கடேஸ்வரனை,அரசு பல்கலைக்கழகத்திற்குத் திருப்பி அனுப்பியது. அவர் பல்கலைக்கழகத்திற்காக நியமிக்கப்பட்ட பேராசிரியர் அல்லர். அப்படிப்பட்ட ஒருவரை கல்வியியல் துறைத் தலைவராக நியமித்தார் துணைவேந்தர் ஜெகநாதன்.

தற்பொழுது சூரமங்கலம் காவல்துறை உதவி ஆணையர் துணைவேந்தரை வன்கொடுமை வழக்கிற்காக விசாரணைக்கு அழைத்து வரும் நிலையில் அவர் கடந்த வெள்ளி,சனி ஆகிய இரண்டு நாட்கள் விசாரணைக்கு ஆஜரானார்.இதனால் ஆத்திரமடைந்த துணைவேந்தர் கல்வியல் துறைக்கு பேராசிரியர் திரு.வக்கீல் என்பவரை துறைத் தலைவராக நியமித்துள்ளார். இவர் பட்டியலினப் பேராசிரியை திருமதி.தனலட்சுமி அவர்களை விட பணி அனுபவத்தில் மிகவும் குறைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது பட்டியலினப் பேராசிரியை மீது தொடுக்கும் ஓர் உளவியல் தாக்குதலே ஆகும்.

இதனை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது. பட்டியலினப் பேராசிரியருக்கு உடனடியாக பல்கலைக் கழக சாசன விதியின்படி துறைத் தலைவர் பதவியினை வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இதே துணைவேந்தர் பல்கலைக்கழகத்தில் பட்டியல் இன அருந்ததியினருக்கு ஒதுக்க வேண்டிய நூலகர் மற்றும் உடற்கல்வி இயக்குனர் பணியிடங்களைப் பொதுப்போட்டிக்கு ஒதுக்கி அங்கு ஜெயப்பிரகாஷ், வெங்கடாஜலம் ஆகியோரை நியமித்தார்.இதுவும் பட்டியல் இனத்திற்கு எதிரான துணைவேந்தரின் ஜாதிய வன்ம நடவடிக்கையே ஆகும். இது 200 புள்ளி இட ஒதுக்கீட்டினை முறையை அப்பட்டமாக மீறிய செயலாகும்.

இப்படி தொடர்ந்து பட்டியல் இனத்திற்கு எதிரானத் தாக்குதலை துணை வேந்தர் ஜெகன்னாதன் மேற்கொள்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம். சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் இட ஒதுக்கீடு முறை முழுமையாக கடைபிடிக்கப்படுவதில்லை.பட்டியல் இன அருந்ததியினருக்குக் கிடைக்க வேண்டிய தமிழ்த் துறைப் பேராசிரியர் பணியிடம் பொதுப்போட்டிக்கு சென்று அங்கு போலி சான்றிதழ் என பலராலும் உறுதி செய்யப்பட்ட பெரியசாமி என்பவர் நியமிக்கப்பட்டார்.இதைப் போல் நூலக அறிவியல் துறை பேராசிரியர் முருகன்,தற்பொழுது ஆளுநர் மாநாட்டில் துணைவேந்தரின் பிரதிநிதியாக கலந்து கொண்ட மேலாண்மைத் துறை பேராசிரியர் யோகானந்தம் மற்றும் கணிதவியல் துறை பேராசிரியர் பிரகாஷ் ஆகியவர்கள் 200 புள்ளி இட ஒதுக்கீட்டிற்கு எதிராக பணியில் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.எந்த பல்கலைக்கழக துணைவேந்தரும் ஆளுநர் கூட்டிய மாநாட்டிற்கு செல்லாத பொழுது சேலம் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மட்டும் இரண்டு பேராசிரியர்களைத் தனது பிரதிநிதிகளாக அதில் கலந்து கொள்ளச் செய்ததை வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்நிலையில் தமிழக அரசு தலையிட்டு பெரியார் பல்கலைக்கழகத்தினுடைய பட்டியலின விரோத நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பல்கலைக்கழக வேந்தரான தமிழக முதல்வரையும்,உயர் கல்வித்துறை அமைச்சரையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

**– "கொளத்தூர் மணி",**
**தலைவர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்.**
***28.04.25.***

# பெரியார் கடவுள் மதத்தை எதிர்த்தது ஏன்? கனிமொழி எம்பி விளக்கம்

கோயம்புத்தூர் மாவட்டம், ஆர்.எஸ்.புரத்தில் உள்ள மாநகராட்சி கலையரங்கத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவையொட்டி இரண்டு நாட்கள் நடைபெறும் கருத்தரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சி, பேரணி மற்றும் பொது மாநாட்டை (26-04-2025) தொடங்கி வைத்து, விழாவில் திமுக துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தொடக்க உரையாற்றினார்.

**இம்மாநாட்டில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசியதாவது:-**

"அண்ணன் சுபவீ அவர்கள் இந்த மாநாட்டிலே நீ கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டபோது... எத்தனையோ பெருமைகள் நமக்கு கிடைக்கலாம், தேர்தலிலே வெற்றி பெறும் வாய்ப்பு கிடைக்கலாம், நம் உழைப்பை அங்கீகரித்து நாம் சார்ந்திருக்கும் இயக்கங்கள் நமக்கு பொறுப்புகள் அளிக்கலாம்.

ஆனால் இதையெல்லாம் விட பெருமையாக நான் நினைப்பது, தலைவர் கலைஞர் அவர்கள் என்னைப் பற்றி மேடையிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.



எங்கள் வீட்டில் எல்லாரும் திமுக என்றால் என் மகள் கனிமொழி திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர் என்று.

என் தந்தையாக தலைவராக அவர் எனக்கு தந்திருக்கும் பெருமையாக, பொறுப்பாக கருதுவது இந்த வார்த்தைகளைதான். அந்த வார்த்தைகளின் நினைவோடுதான் இறுமாப்போடு இந்த மேடையில் நிற்கிறேன்.

### சுயமரியாதை - வீரியமிக்க சொல்!

அழகான வீரியமிக்க வார்த்தை இருக்கிறது என்றால் அது சுயமரியாதை என்ற சொல்தான். வேறு எந்த அடிப்படைத் தேவைகளைத் தாண்டி ஒரு வாழ்க்கை வாழ்க்கையாக இருப்பதற்கு தேவை சுயமரியாதைதான்.

சுயமரியாதையோடுதான் உணவு தேவைப்படுகிறது. சுயமரியாதையோடுதான் நமக்கு இருக்க இடம் தேவைப்படுகிறது. சுயமரியாதையோடுதான் நமக்கு எதிர்காலம் தேவைப்படுகிறது. இப்படி சுயமரியாதையை உருவாக்கி கட்டமைத்து பாதுகாத்துத் தந்த இயக்கம்தான் திராவிட இயக்கம்.

இந்த உலகத்தில் பல நாடுகளில் பல ஏற்றத் தாழ்வுகள் இருந்திருக்கிறது. இன்றுவரை இருப்பது ஆண் பெண் ஏற்றத் தாழ்வு. பெண் இரண்டாம் பட்சம்தான் என்ற இந்த நிலை இன்றுவரை இருக்கிறது. நிறம், மதம், மொழி, பொருளாதாரத்தின் பெயரால் எத்தனையோ ஏற்றத் தாழ்வுகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. அத்தனை ஏற்றத் தாழ்வுகளையும் மாற்றிவிடலாம், ஆண் பெண் என்பதைத் தவிர, பொருளாதாரத்தை ஈட்ட முடிந்தால் இரு தலைமுறைகளுக்குப் பின் நாம் மேட்டுக்குடியாகிவிடலாம்., படித்தவர் படிக்காதவர் என்ற ஏற்றத் தாழ்வையும் நம்மால் மாற்றிவிட முடியும்.

ஆப்பிரிக்கர்களை நூற்றாண்டுகளாக அடிமைகளாக நடத்தியபோதும், அமெரிக்க அதிபராக ஒரு கறுப்பர் வந்து அமர்ந்ததையும் நாம் கண்கூடாக பார்த்திருக்கிறோம்.

ஒரு ஊரில் ஒரு சிலருக்கு தோல் சம்பந்தப்பட்ட சுவாசம் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றால் அவர்களை மருத்துவரிடம் அழைத்துச் சென்று சரி செய்ய முடியும், ஊருக்கே பிரச்சினை வந்தது என்றால் அதன் வேர் எங்கே என்று தேட வேண்டும். அது ஒரு தொழிற்சாலையில் இருந்து வருகிறது என்றால்.. அடுத்த தலைமுறையை காப்பாற்ற வேண்டும் என்றால் அந்த தொழிற்சாலையை மூட வேண்டும்.

அதைத்தான் பெரியார் சொன்னார். எந்த இடத்தில் இருந்து பிரச்சினை உருவாகிறதோ அது மதமாக இருக்கட்டும், கடவுளாக இருக்கட்டும் அதை மூடு. ஒவ்வொருத்தராக கூப்பிட்டு வைத்தியம் பார்க்க முடியாது என்று சொன்னதுதான் சுயமரியாதை இயக்கம்.

### மதம் - கடவுள்!

தந்தை பெரியாரிடம் ஒருவர் கேட்கிறார், 'ஏன் மதத்தை எதிர்க்கிறீர்கள்? ஏன் கடவுளை எதிர்க்கிறீர்கள்' என்று கேட்கிறார்.

அதற்கு பெரியார், உன் அலுவலகத்தில் உனக்கு கீழ் வேலை செய்யும் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரும் நீயும் ஒரு கோயிலுக்கு போனீர்கள் என்றால்... அவரை உள்ளே விடுவாங்களா, உன்னை உள்ளே விடுவாங்களா என்று கேட்கிறார். அப்போது, 'அவரைத்தான் உள்ளே விடுவார்கள்; என்றார்.

அப்படியென்றால் உன்னால் ஜாதியை தாண்டி தடுப்பைத் தாண்டி போக முடியாத நிலையை இந்த மதம், கடவுள் உருவாக்கி வைத்திருக்கிறது. அதை மாற்றத்தான் அவை இரண்டையும் எதிர்க்கிறேன் என்கிறார் பெரியார்.

நீங்கள் படித்து வெளிநாட்டில் போய் வாழலாம், எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். ஆனால் சாதி உங்களோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது இறந்தால் கூட மேல்சாதிக்கான சடங்கு வேறு, நமக்கான சடங்கு என்பது வேறு,

பிறப்பதற்கு முன்பாகத் தொடங்கும் சாதிக் கட்டமைப்பு இறப்பைத் தாண்டியும் தூக்கி சுமக்கக் கூடியதாக இருக்கிறது.

### ஒடுக்கப்பட்டோருக்கு போராடியவர் பெரியார்!

'எனக்கும் கடவுளுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. . எனக்கு இந்த சாதி என்பது பிடிக்க வில்லை. யார் ஒடுக்கப்பட்டவர் என்று நினைத்தாலும் அதை எதிர்த்தவர்தான் பெரியார். சாதியின் பெயரால், நிறத்தின் பெயரால் யார் ஒடுக்கப்பட்டாலும், ஒடுக்கப்பட்டவருக்காக போராடுவேன் என்று சொன்னார் பெரியார். சாதி எப்படி வந்தது? மதத்தால் வந்தது. மதத்தின் காப்பாளர் கடவுள்.

**ஒரே ஒரு உதாரணம்:** ஒரு ஊரில் ஒரு சிலருக்கு தோல் சம்பந்தப்பட்ட சுவாசம் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றால் அவர்களை மருத்துவரிடம் அழைத்துச் சென்று சரி செய்ய முடியும், ஊருக்கே பிரச்சினை வந்தது என்றால் அதன் வேர் எங்கே என்று தேட வேண்டும். அது ஒரு தொழிற்சாலையில் இருந்து வருகிறது என்றால்.. அடுத்த தலைமுறையைக் காப்பாற்ற வேண்டும் என்றால் அந்த தொழிற்சாலையைத் மூட வேண்டும்.

காற்றை நிலத்தை நீரை நஞ்சாக்கும் அந்த ஆலையை மூட வேண்டும். என்று போராடி 13 பேரை பலிகொடுத்த தூத்துக்குடியில் இருந்து கேட்கிறேன். தொழிற்சாலையைத் தானே மூடுகிறோம்?

அதைத்தான் பெரியார் சொன்னார். எந்த இடத்தில் இருந்து பிரச்சினை உருவாகிறதோ அது மதமாக இருக்கட்டும், கடவுளாக இருக்கட்டும் அதை மூடு. ஒவ்வொருத்தராக கூப்பிட்டு வைத்தியம் பார்க்க முடியாது என்று சொன்னதுதான் சுயமரியாதை இயக்கம்.

அதனால்தான் எந்த மதமாக இருந்தாலும் தவறான கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்த்தாலும் அதை எதிர்த்தார்.

இன்று நிறைய பேர் சொல்கிறார்கள். திராவிட இயக்கம் இந்து மக்களுக்கு எதிரானது என்று. அதை நான் ஜஸ்டிஃபை பண்ணப் போவது இல்லை. அதற்கான அவசியமும் கிடையாது.

நான் இங்கே இரு விஷயங்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன். அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள்தான் பெரும்பான்மை இந்து மக்களின் பாதுகாவலர்கள், இந்து மக்களின் அடுத்த தலைமுறையை நாங்கள்தான் பாதுகாக்கிறோம் எங்களை நம்புங்கள் என்று சொல்கிறார்கள்.

### உரிமைகளை பெற்றுத் தந்தது திராவிட இயக்கம்!

1910 களில் வந்த இரு கணக்கெடுப்பை நான் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். சென்னை பல்கலைக் கழகத்தில் பதிவு செய்த பட்டதாரிகளாக 650 பேர் இருந்தார்கள். அதில் நான் பிராமின்ஸ் என்று சொல்லக் கூடிய பிற்படுத்தப்பட்ட மக்களான இந்துக்கள் 12 பேர். மீதி 74 இருக்கும் 500க்கும் மேற்பட்டவர்கள் 3% இருக்கும் பிராமண சாதியை சேர்ந்தவர்கள்.

ஆனால் இன்று தமிழ்நாட்டில் இருக்கும் பட்டதாரிகள் தேசிய சராசரியை விட அதிகமாக இருக்கிறோம். அதில் எத்தனை சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தோம் என்றால் யார் பெரும்பான்மை இந்து மக்களுக்காக பாடுபட்டிருக்கிறார்கள். யார் அவர்களுக்கு உதவியிருக்கிறார்கள் என்று தெரியும்.

யார் அவர்களின் தலைமுறையை மீட்டெடுத்து சிலிகான் வேலியில் இருந்து உலகம் முழுதும் பிற்படுத்தப்பட்டத் தமிழர்கள் கோலோச்சுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் திராவிட இயக்கம்தான்.

அதேபோல்; சப் கலெக்டர் 55% பதவிகளில் 3% இருந்த ஒரே இனத்தை சாந்தவர்கள்தான். துணை நீதிபதிகளாக 83% அவர்கள்தான் இருந்தார்கள். 72% முன்சீபுகள் அவர்கள்தான்.

இன்று எத்தனை கலெக்டர்கள், அரசுப் பதவிகளிலே இருக்கிறார்கள். நாட்டிலேயே இத்தனை பேர் வந்திருக்கிறார்கள் என்றால் பிற்படுத்தப்பட்ட மக்கள் வந்திருக்கிறார்கள் என்றால் திராவிடஇயக்கம்தான்காரணம். இதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். உங்களுடைய உரிமைகளை போராடி உங்களுக்கு பெற்றுத் தந்த இயக்கம் திராவிட இயக்கம்.

நம் முன்னால் பல கேள்விகள் விஸ்வரூபம் எடுத்து நின்று கொண்டிருக்கிறது.

எல்லா மதங்களிலும் இருக்கும் மதவாதிகள் நமக்குத் திரும்பத் திரும்ப சொல்லித் தரும் ஒன்று... சமூகக் கட்டமைப்பை கேள்வி கேட்டுவிடக் கூடாது என்பதற்காக, 'நீ இந்த வாழ்வில் கஷ்டப்பட்டால், கேள்வி கேட்காமல் இருந்தால், உனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையை நீ ஏற்றுக்கொண்டால் இதைத் தாண்டி உனக்கு பிரமாதமான சொர்க்கம் இருக்கிறது.

நீ எவ்வளவு அடிமையாக நடத்தப்பட்டாலும், உன்னிடம் இருந்து உரிமைகள் பறிக்கப்பட்டாலும் அதெல்லாம் அடுத்த ஜென்மத்தில் ஈடு செய்யப்படும்' என்றெல்லாம் சொல்லி நம்மை வார்த்தெடுத்தார்கள்.

### திரும்பத் திரும்ப சொல்கிறோம்!

யுவெல் ஹராரி என்ற மிக முக்கியமான சிந்தனையாளர்:

'மனிதர்களுக்கு கதைகள் தேவைப்படுகிறது. அதற்கு மதங்கள் தேவைப்படுகிறது. நீ வைத்திருக்கும் இரண்டு வாழைப் பழங்களில் ஒன்றை என்னிடம் கொடுத்துவிட்டால் அடுத்த ஜென்மத்தில் நன்றாக இருக்கலாம். உனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்குமென்று சொல்லி அந்த வாழைப் பழத்தை ஏமாற்றி நீ வாங்கிவிட முடியும்.

ஆனால் இதை ஒரு சிம்பன்ஸியிடம் போய் , இதேபோல் கேட்டால் அது என்ன பண்ணும்? சிம்பன்ஸியிடம் இருந்து அடிதான் வாங்கிக் கொண்டு வரவேண்டும்.

மிருகங்களிடம் கூட சொல்லி செல்லுபடியாகாத ஒரு கதையை மனிதர்களிடம் திரும்பத் திரும்ப நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இதே கதைகளை பெண்களிடம், ஒடுக்கப்பட்ட சமூக மக்களிடம், நீ கஷ்டப்படு... இதுதான் உனக்கு விதிக்கப்பட்டது என்று பாசிசம் இன்று சொல்லிக் கொண்டிருக்கிறது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நம்முடைய முதலமைச்சர் ஒவ்வொன்றையும் எதிர்த்துக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார். அதனால்தான் அவரைப் பார்த்தாலே மேலே நடுக்கம் ஏற்படுகிறது.

நீங்கள் எதையெல்லாம் தேசியம் என்று கட்டமைக்கிறீர்களோ, எதிர்த்து கேள்வி கேட்பவர்களை எல்லாம் தேச விரோதிகள், நக்சல்கள் என்று கட்டமைப்பீர்களோ... நான் இந்த நாட்டின்பால் உள்ள அக்கறையில் கேட்கிறேன் என்று முதலமைச்சர் கேட்கிறார்.

தொடரும்...

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# களப்பணியில் கழக தோழர்கள்



*18.03.25:* புலியூர், தரங்கம்பட்டியில் “பெரியார் இன்னும் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?” பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

பரப்புரையின் போது கரூர் மாவட்ட எல்லையில் நொய்யல் பகுதியில் கரூர் மாவட்ட அரசு வழக்கறிஞர் குடியரசு கிருஷ்ணராயபுரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காமராஜ், பரப்புரைப் பயணத் தோழர்களுக்கு குடிநீர், பிஸ்கட் வழங்கி வழியனுப்பி வைத்தனர். கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி மற்றும் பயணத்தில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் பயனாடை அணிவித்து வரவேற்றனர்.

*19.03.25:* மணப்பாறை காமராஜர் சிலை, இலுப்பூர், அன்னவாசல் பேருந்து நிறுத்தம் ஆகிய பகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் எழுச்சியோடு நடைபெற்றன.

*20.03.25:* புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் 4-ரோடு, ஆலங்குடி, விராலிமலை, வடகாடு, கைகாட்டி பகுதிகளில் மக்கள் பேராதரவோடு பரப்புரைக் கூட்டங்கள் சிறப்புடன் நடைபெற்றன.

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி சொர்ண குமார், விசிக வழக்கறிஞர் அம்பேத்கர் வளவன், சிபிஐ முருகன் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், கழக வெளியீட்டுச் செயலாளர் ராம இளங்கோவன், சிவகங்கை மாவட்ட தலைவர் பெரிய முத்து, திருப்பூர் முத்து ஆகியோர் கருத்துரையாற்றினார்.

ஆலங்குடியில் காலை உணவை உடற்கல்வி ஆசிரியர் வெங்கடேசன், வடகாட்டில் மதிய உணவை தமிழ்க்குடில் கரு காளிமுத்து, பேராவூரணியில் இரவு உணவை பேரூராட்சி பெருந்தலைவர் சாந்தி சேகர் அவர்களும் சிறப்பான முறையில் வழங்கினர்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் பரப்புரை பயண விளக்க பொதுக்கூட்டம் 20.3.2025 மாலை 5 மணிக்கு பேராவூரணி அண்ணா சிலை அருகில் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்திற்கு கழக ஒன்றிய செயலாளர் மருத உதயகுமார் தலைமை தாங்கினார் . தஞ்சை மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம் வரவேற்புரை ஆற்றினார்.

கழக சிவகங்கை மாவட்ட தலைவர் பெரியார் முத்து, சிபிஎம் வழக்கறிஞர் கருப்பையா, சிபிஐ பன்னீர் செல்வம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சேக்இபராம்சா, மோட்சக் குணவழகன் விசிக, தமிழ் வழிக் கல்வி இயக்கத்தின் வெங்கடேசன், மனிதநேய ஜனநாயக கட்சியின் அப்துல் சலாம், அறநெறி மக்கள் கட்சியின் ஜேம்ஸ், தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் ஒட்டங்காடு மூர்த்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் குமார், கழக வெளியீட்டு செயலாளர் இராம இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, கழகப் பொருளாளர் துரைசாமி கருத்துரையாற்றினர்.

நிறைவாக கழகப் பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் பெரியார் ஏன் எதிரிகளை பதறப் வைக்கிறார் என்பதை விளக்கி சிறப்புரை ஆற்றினார். ஒன்றியத் தலைவர் கோவிந்தன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

***கழக வார ஏடு புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு ஆண்டு சந்த 50 சந்தாவுக்கான தொகை ரூபாய் 15,000 கழகப் பொருளாளர் சுதுரைச்சாமி அவர்களிடம் வழங்கப்பட்டது.***

*21.03.2025:* பட்டுக்கோட்டையில், ஒரத்தநாடு, மன்னார்குடி, வடசேரி பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன. ஒன்றிய செயலாளர் சொ.சிவசுப்பிரமணியண் தலைமை தாங்கினாார். திவிக பொருளாளர் துரைச்சாமி பேச முத்து, மாவட்ட செயலாளர் கு.பாரி, நிர்மல்குமார், கொள்கை பரப்புச் செயலாளர் பால்பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். நிர்மல்குமார் பேச்சாளர் முத்து இருவரும் இணைந்து கேள்வி பதில் நிகழ்ச்சியை நடத்தினார்கள். விசிக மாவட்டச் செயலாளர் அரவிந்த் குமார், சிபிஐ மாவட்ட பொறுப்பாளர் பாலசுந்தரம், சிபிஐ ஒன்றிய பொறுப்பாளர் ரவி. காலை உணவினை விசிக மாவட்ட செயலாளர் அரவிந்த் குமார் வழங்கினார்.

## வழக்குரைஞர்கள் திருமூர்த்தி, ஜான் இளமாறனுக்கு பாராட்டு!

கர்நாடக தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து ராஜ் பவன், வெல்கம் ஹோட்டல்களை முற்றுகையிட்டதாக தொடரப்பட்ட வழக்கு, எஸ்.வி.சேகர் வீட்டை முற்றுகையிட்ட வழக்கு, பெரியார் சிலையை உடைப்போம் என ஹெச்.ராஜா கூறியதற்காக சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் எதிர்வினையாற்றியதாக தொடரப்பட்ட வழக்கு, இலங்கை தமிழர் விவகாரத்தில் புத்த மட முற்றுகை வழக்கு என கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த பல முக்கிய வழக்குகளில் இருந்து கழகத் தோழர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



இந்த வழக்குகளில் கழகத் தோழர்கள் சார்பாக ஆஜராகி விடுதலை பெற்றுத் தந்த வழக்குரைஞர்கள் திருமூர்த்தி, இளமாறன், ஜான் ஆகியோருக்கு பாராட்டு விழா, சென்னை தியாகராயர் நகரில் உள்ள உணவகம் ஒன்றில் நடைபெற்றது. தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த பாராட்டு நிகழ்வில், கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கழகத்தினர் மீதான வழக்குகளை திறம்பட நடத்திய வழக்கறிஞர்களை பாராட்டிப் புத்தகங்களை வழங்கினார்.

வழக்குரைஞர் ஜான் மற்றும் பல்வேறு வழக்கறிஞர்கள் பங்கேற்றனர். “இன உணர்வோடு சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் நிகழ்த்திய அரசியல் எதிர்வினை சார்ந்த வழக்குகளில் இருந்து தோழர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். தோழர்களுக்காக வழக்காடி விடுதலை பெற்றுத் தந்த மகிழ்ச்சியான தருணத்தைக் கொண்டாடும் விதமாக இந்நிகழ்வு அமைந்தது. சிறை சென்று வழக்கில் இருந்து மீண்ட தோழர்களுக்கு வாழ்த்துகள்” என கழகப் பொதுச்செயலாளர் பேசினார்.



சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த இராவணன், சுகுமார், கோபி, அருண், பிரதீப் பிரபாகரன், திவாகர், நந்தா, உமாபதி, தமிழ்ச்செல்வன், தட்சணாமூர்த்தி, தாமரை, கார்த்திக், ஜெயராம், சுரேஷ், நாத்திகன் ஆகியோர் இந்த வழக்குகளில் கைதாகி இருந்தனர்.

## அம்பேத்கர் சிலைக்கு கழகம் மரியாதை!

**கோவை:** சிவானந்தா காலனியில் திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்ப்புலிகள் கட்சியின் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் 135-வது பிறந்தநாளில் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் நவீன் அவர்கள் சமத்துவ நாள் உறுதிமொழி வாசிக்க அனைவரும் உறுதிமொழி எடுத்துகொண்டனர். பின்பு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சமத்துவ நாள் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்ப்புலிகள் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் ராமச்சந்திரன், கோவை மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் டெம்போ சிவா, திவிக கோவை மாநகரத் தலைவர் நிர்மல்குமார், திவிக கோவை மாநகரச் செயலாளர் வெங்கட், திவிக கோவை மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன், முன்னாள் கோவை மாவட்ட திமுக மாணவர் அணி அமைப்பாளர் மதிவாணன், தமிழ்ப்புலிகள் தோழர்கள் தம்பி செந்தில், கோவை குமார், ராமகிருஷ்ணன், திவிக தோழர்கள் ஸ்டாலின், மாதவன், நிலவழகன், ராமகிருஷ்ணன், கீர்த்திகா, அபிலேஸ் பாண்டியன் மற்றும் மாவட்ட, மாநகர பொறுப்பாளர்கள், தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இறுதியாக ரத்தினபுரி பகுதி திவிக பொறுப்பாளர் சதீஸ் நன்றி கூறினார்.

**மதுரை:** புரட்சியாளர் அம்பேத்கரின் 135-வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக தோழர் சத்தியமூர்த்தி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மதுரை மாவட்டக் காப்பாளர் தளபதி மற்றும் முருகேசன், வேங்கைமாறன், ஆனந்த், காமாட்சிபாண்டி மற்றும் மற்றும் மே 17 பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**ஏற்காடு:** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் ஏப்ரல் 14 அன்று ஏற்காடு ஒண்டிகடை பகுதியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் அம்பேத்கர் மக்கள் இயக்கம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் திரளாக பங்குபெற்றனர்.

ஈரோடு வடக்கு :கோபிசெட்டிபாளையம் சீதாலட்சுமிபுரம் பகுதியில் பு.இ.மு. சார்பில் அண்ணல் அம்பேத்கரின் 135-வது பிறந்தநாள் விழா ரமேஷ் தலைமையில் கொண்டாடப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக ராம இளங்கோவன் உரையாற்றினார். தி.க.மாவட்ட பொறுப்பாளர் சிவலிங்கம், த.பெ.தி.க. சார்பாக குணா, வழக்கறிஞர்கள் சோமசுந்தரம், ஜோதி ஆகியோர் பங்கேற்றனர்.



புரட்சிகர இளைஞர் முன்னணியின் சார்பாக சண்முகம் சிறப்புரையாற்றினார். அண்ணல் அம்பேத்கர் படத்தை தேவராஜ் திறந்து வைத்தார். படத்திற்கு கண்ணன் மாலை அணிவித்தார்.

இறுதியாக அண்ணல் அம்பேத்கர் படத்திற்கு மலர் தூவி கேசரி இனிப்பு வழங்கப்பட்டது. 40-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : May 02, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran